## திருநெல்வேலி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2017-18 நிதியாண்டிற்கான ஆண்டறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ன் படி திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண். ந.க.எம்1/37826/2017, நாள். 06.01.2017 - ன் படி திருநெல்வேலி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளைப் பத்திரமானது 20.11.2017 அன்று தாயார் செய்யப்பட்டு, ஆவண எண். 231/2017, நாள். 23.11.2017 - ன் படி பாளையங்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிர்வாகக்குழு அமைப்பு | வ. எண் | மேலாண்மைக்குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி. | 1. | மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி. |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், திருநெல்வேலி. | 2. | மாவட்ட வருவாய் அலுவலர், திருநெல்வேலி. |
| 3. | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, திருநெல்வேலி. | | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, திருநெல்வேலி. |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருநெல்வேலி. | 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருநெல்வேலி. |
| 5. | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், திருநெல்வேலி. | 5. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், ஊராட்சிகள் வளர்ச்சித் துறை, திருநெல்வேலி. |
| 6. | முதன்மைக் கல்வி அலுவலர், திருநெல்வேலி. | 6. | உதவி இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை, திருநெல்வேலி. |
| 7. | மாவட்டக் கருவூல அலுவலர், திருநெல்வேலி. | 7. | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், திருநெல்வேலி. |
| 8. | மாவட்ட சமூக நல அலுவலர், திருநெல்வேலி. | 8. | மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், திருநெல்வேலி. |
| 9. | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), திருநெல்வேலி. | 9. | மாவட்ட வன அலுவலர், திருநெல்வேலி. |
| 10. | திரு.குணசிங் | 10. | முதன்மைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு. |

Scanned with CamScanner

| | | | |
|---|---|---|---|
| | | 11. | உதவி இயக்குநர், நில அளவைப் பதிவேடுகள் துறை, திருநெல்வேலி. |
| | | 12. | மாவட்ட சமூக நல அலுவலர், திருநெல்வேலி. |
| | | 13. | துணை இயக்குநர், (பொது சுகாதார மையப் பொறியாளர்) சுகாதாரப் பணிகள், திருநெல்வேலி. |
| | | 14. | மாவட்ட கருவூல அலுவலர், திருநெல்வேலி. |
| | | 15. | சார் ஆட்சியர், சேரன்மகாதேவி. |
| | | 16. | வருவாய் கோட்டாட்சியர், திருநெல்வேலி. |

திருநெல்வேலி மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, திருநெல்வேலி, இந்தியன் வங்கிக் கிளையில் (கணக்கு எண். 6585796646) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 29 பெருங்கனிம சுரங்கக் குத்தகை உரிமங்களும் 155 சிறு கனிம குவாரி குத்தகை உரிமைதாரர்கள் திருநெல்வேலி மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக கனிம பாக்கி வசூல் செய்யப்பட வேண்டும். இவற்றில் 29 பெருங்கனிமங்கள் உரிமங்கள் 12.01.2015 - க்கு முன்னர் வழங்கப்பட்டவையாதலால் அவற்றிக்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது. மேலும் நடப்பிலுள்ள 155 சிறு கனிம குவாரி குத்தகை உரிமங்களில் 112 குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையும், மீதமுள்ள 43 குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையும் கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 112 கிராம ஊராட்சிகள் சுரங்கப் பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன.

Scanned with CamScanner

திருநெல்வேலி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.03.2018 வரை ரூ.6,12,94,086 (ரூபாய் ஆறு கோடியே பன்னிரெண்டு இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து என்பத்து ஆறு மட்டும்) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிகணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

2017-18 ஆம் நிதியாண்டில் திருநெல்வேலி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக கீழ்க்கண்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பு (ரூபாயில்) | நடைமுறைப்படுத்தும் அமைப்பு | உயர் முன்னுரிமை / பிற முன்னுரிமைத் திட்டம் |
|---|---|---|---|---|---|
| 1 | அடிப்படை கட்டமைப்பு | ஆதிதிராவிடர் பெண்கள் விடுதி சீரமைப்பு - மானூர் | 3,31,000/- | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகம், திருநெல்வேலி. | உயர் முன்னுரிமை |
| 2 | திறன் மேம்படுத்துதல் | நரிகுறவர்களுக்கு கைவினைப் பொருட்கள் செய்முறை பயிற்சி | 2,81,800/- | மகளிர் திட்டம், திருநெல்வேலி. | பிற முன்னுரிமை |
| 3 | திறன் மேம்படுத்துதல் | பள்ளிக் குழந்தைகளுக்கு ஓவியப் பயிற்சி முகாம் | 1,45,000/- | மகளிர் திட்டம், திருநெல்வேலி. | பிற முன்னுரிமை |
| 4 | குடிதண்ணீர் திட்டம் | குடிதண்ணீர் (RO) Plant - முன்னீர்பள்ளம் | 2,00,000/- | சுகாதாரதுறை, திருநெல்வேலி. | உயர் முன்னுரிமை |

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருநெல்வேலி.

Scanned with CamScanner